தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## கோடை உழவு துவக்கம்

**கமுதி,**

கமுதி அருகே கோடை உழவு துவக்க விழாவை, கிராமத்தினர், செவ்வாய்க்கிழமை கொண்டாடினர்.

அபிராமம்-ப.பச்சேரியைச் சேர்ந்த குறிப்பிட்ட சமூகத்தினர் ஆண்டு தோறும், தமிழ்ப் புத்தாண்டு தினத்தில், ஆலயங்களில் சாமி கும்பிட்டு, ஊர்வலமாக வயலுக்குச் சென்று, கோடை உழவு துவக்க விழாவை நடத்தி வருகின்றனர். இந்த ஆண்டு ப.பச்சேரி கிராமத்தினர் கோடை உழவு துவக்க விழா நடத்தினார்கள். ஊரில் இருந்து மேள, தாளத்துடன், வெடிகள் வெடித்தும் ஊர்வலமாக வந்தார்கள். அபிராமத்தில் ஸ்ரீசப்பாணியம்மன் ஆலயத்தில் வணங்கி, புதிய கலப்பை ஏர் பெற்று, உடையநாதபுரததில் உள்ள ஸ்ரீகற்குடைய அய்யனார் ஆலயத்தில் பூஜைகள் நடத்தி, வயல்களில் கலப்பை ஏர்களால் கோடை உழவு செய்தனர்.

## அவிநாசியில் ரூ.55 லட்சத்துக்கு பருத்தி ஏலம்

**அவிநாசி,**

அவிநாசி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க வளாகத்தில் புதன்கிழமை நடைபெற்ற ஏலத்தில் ரூ.55 லட்சத்துக்கு பருத்தி ஏலம் போனது .

ஏ.சி.எம்.எஸ் ஏல மைத்தியத்தில் நடைபெற்ற ஏலத்தில் 3000 பருத்தி மூட்டைகள் கொண்டு வரப்பட்டன. குவிண்டால் ஒன்றுக்கு டி.சி.எச் ரகப் பருத்தி ரூ.6000 முதல் ரூ.6,560 வரையிலும், ஆர்.சி.எச். ரகப் பருத்தி ரூ.4,800 முதல் ரூ.5,380 வரையிலும், மட்டரகப் பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2600 முதல் ரூ.3200 வரையிலும் ஏலம் போனது. இதில் குன்னத்தூர், செங்கப்பள்ளி, சேலம்,

திருப்பத்தூர், ஆத்தூர், மேட்டூர், தர்மபுரி, பொம்மிடிப்பூண்டி, அந்தியூர், குண்டடம், கிணத்துக்கடவு, அன்னூர், கோபி ஆகிய பகுதிகளிலிருந்து 300 பருத்தி விவசாயிகளும், 12 பருத்தி வியாபாரிகளும் பங்கேற்றனர்.

## கறிக்கோழி கொள்முதல் விலையில் மாற்றம் இல்லை

**பல்லடம்,**

திருப்பூர் மாவட்டம், பல்லடத்தை தலைமையிடமாக கொண்டு செயல்படும் பி.சி.சி. (பிராய்லர் கோர்டினேஷன் கமிட்டி) தினந்தோறும் கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலையை நிர்ணயம் செய்கிறது.

செவ்வாய்க்கிழமை பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.78 ஆக இருந்தது. விற்பனையில் மாற்றம் இல்லாததால் புதன்கிழமையும் அதே விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முட்டைக் கோழி கிலோ ரூ.47.

முட்டை விலை: நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு புதன்கிழமை அறிவித்த முட்டை பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ.2.66, சென்னையில் ரூ.3.

## ஆவின் பால் நாள் ஒன்றுக்கு 2.55 லட்சம் லிட்டர் உற்பத்தி: பொதுமேலாளர் தகவல்

**வேலூர்,**

வேலூர், திருவண்ணாமலை மாவட்டங்களில் சராசரியாக நாள் ஒன்றுக்கு 2 லட்சத்து 55 ஆயிரம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுகிறது என்று ஆவின் பொது மேலாளர் பெரியசாமி தெரிவித்தார்.

உள்ளூர் விற்பனைக்கு அனுப்பப்படும் பால் அளவு நுகர்வோர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் 83 ஆயிரம் லிட்டர் விநியோகம் செய்யப்படுகிறது. மாவட்டத்தில் இருந்து சென்னைக்கு நாள்தோறும் 1.70 லட்சம் லிட்டர் பால் அனுப்பி வைக்கப் படுகிறது எனக் கூறியுள்ளார் பெரியசாமி.

**இன்றைய வேளாண் செய்திகள்**

## 1,200 வாழைத்தார் குவிப்பு ரூ.1.54 லட்சத்துக்கு ஏலம்

**மோகனூர்**: ஒருவந்தூரில் நடந்த ஏலத்தில், 1,200 வாழைத்தார்கள், ஒரு லட்சத்து, 54 ஆயிரம் ரூபாய்க்கு ஏலம் போனது. மோகனூர் சுற்று வட்டாரத்தில், ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பில் வாழைத்தார் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இங்கு, பூவன், ரஸ்தாளி, கற்பூரவள்ளி, மொந்தன், பச்சநாடன் ஆகிய ரகங்கள் விளைவிக்கப்படுகிறது. ஒருவந்தூர் தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கியில், வாரம் தோறும், புதன்கிழமை வாழைத்தார் ஏலம் நடக்கிறது. அதன்படி, நேற்று ஏலம் நடந்தது. ஏலத்தில், சுற்று வட்டாரத்தில் சாகுபடி செய்துள்ள வாழை தோட்டங்களில் இருந்து, வாழைத்தார்கள் அறுவடை செய்து கொண்டுவரப்பட்டது. அவ்வாறு கொண்டுவரப்பட்ட வாழைத்தார்களை, பல்வேறு பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள், போட்டி போட்டு ஏலம் எடுத்தனர். ஒரு வாழைத்தார் குறைந்த பட்சம், 300 ரூபாய்க்கும் அதிகபட்சம், 900 ரூபாய்க்கும் ஏலம் போனது. நேற்று நடந்த ஏலத்தில், 1,200 வாழைத்தார்கள், 1.54 லட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது.

## அந்தியூர் விற்பனை கூடத்தில் ரூ.27.14 லட்சத்துக்கு ஏலம்

**அந்தியூர்**: அந்தியூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், விவசாய விளைபொருட்கள் ரூ.27,13,984க்கு விற்றது. அந்தியூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நடந்த ஏலத்தில் 20,010 தேங்காய் விற்பனைக்கு வந்தது. அதிக பட்சமாக ரூ.16, குறைந்த பட்சமாக,6.75 ரூபாய், சராசரியாக, 12.50 ரூபாய் என மொத்தம் ரூ.2,01,608க்கு விற்றது. தேங்காய் பருப்பு 122 மூட்டை விற்பனைக்கு வந்தது. கிலோ அதிகபட்சமாக ரூ.102.16, குறைந்த பட்சமாக ரூ.86.09க்கு விற்றது. சராசரியாக ரூ.98.59 விலை நிர்ணயம் செய்யப்பட்டது. மொத்தம் ரூ.3,14,871க்கு விற்பனை ஆனது. மக்காச்சோளம், 70 மூட்டை விற்பனைக்கு வந்தது. அதிகபட்சமாக, ரூ.14.31, குறைந்த பட்ச விலையாக, ரூ.13.66, சராசரியாக

ரூ.14.06 என மொத்தம் ரூ.84 ஆயிரத்து 052க்கு விற்றது. வெள்ளை எள், 261 மூட்டை விற்பனைக்கு கொண்டு வரப்பட்டது. கிலோ அதிகபட்சமாக ரூ.139.89க்கும், குறைந்தபட்சமாக ரூ.132.19க்கும், சராசரியாக ரூ.136.89க்கும் மொத்தம் ரூ.20, 91,829 ரூபாய்க்கு ஏலம் போனது. ஆமணக்கு மொத்தம், 12 மூட்டைகள் கொண்டு வரப்பட்டன. அதிகபட்சமாக, ரூ.44.09க்கும், குறைந்த பட்சமாக, ரூ.34.16க்கும், சராசரியாக, ரூ.40.09க்கும் விற்பனை ஆனது.மொத்தம், ரூ.21 ஆயிரத்து, 624க்கு ஏலம் போனது.

## குஜராத் செல்லும் பெரியகுளம் மல்கோவா மாங்காய்

**பெரியகுளம்** : பெரியகுளம் பகுதியில் இருந்து மல்கோவா மாங்காய், குஜராத்திற்கு தினமும் நூறு டன் அனுப்பப்படுகிறது. சீசன் துவக்கத்தில், விலை அதிகமுள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். பெரியகுளம் பகுதிகளான கோயில்காடு, சுக்காம்பாறை, தொண்டைகத்தி,சோத்துப்பாறை, கும்பக்கரை,ஈஞ்சம்மலை உள்ளிட்ட பல இடங்களில், 20 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமாக மாந்தோப்புகள் உள்ளது. தமிழகத்தில் சேலம், தர்மபுரி மாவட்டங்களுக்கு அடுத்தபடியாக பெரியகுளம், மா விளைச்சலில் மூன்றாம் இடத்தில் உள்ளது. பெரியகுளம் பகுதி மாங்காயில் இனிப்புத்தன்மை அதிகம் உள்ளதால், வெளிமாநில வியாபாரிகள் அதிகளவில், பெரியகுளம் பகுதியில் முகாமிட்டுள்ளனர். ஏப்ரல் மாதம் சீசன் துவங்கி, ஆகஸ்ட் வரை நீடிக்கும். குஜராத், டில்லி, கேரளா, கர்நாடகா, கோவா ஆகிய வெளிமாநிலங்களுக்கும், சென்னை, மதுரை, கோவை, திருச்சி மாவட்ட உள்ளூர் சந்தைகளுக்கும் மாங்காய்கள் அனுப்பப்படும். இந்த ஆண்டு சீசன் துவக்கத்தில், மல்கோவா ஒரு டன் 60 ஆயிரம் ரூபாயில் இருந்து 65 ஆயிரம் வரைக்கும், கிரேப் 40 ஆயிரத்தில் இருந்து 45 ஆயிரமாகவும், செந்தூரம் அதே விலையிலும், கல்லாமை 30 ஆயிரத்தில் இருந்து 35 ஆயிரமாகவும், ஊறுகாய் காய் 12 ஆயிரத்தில் இருந்து, 15 ஆயிரமாகவும் சீசன் துவக்கத்திலே விலை எகிறியுள்ளது. விலை ஏற்றம் ஒரு பக்கம் மகிழ்ச்சியை தந்தாலும், பூ எடுத்த சமயத்தில் மழை பெய்ததால் பெரும்பாலான தோப்புகளில் விளைச்சல் குறைவாக உள்ளது.

## நிலக்கடலை விலை குறைவு

**அவிநாசி** : சேவூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நடந்த இந்த வார நிலக்கடலை ஏலத்துக்கு, 400 மூட்டை வரத்தாக இருந்தது. இது, கடந்த வாரத்தை காட்டிலும், 300 மூட்டை குறைவு. வரத்து குறைந்ததோடு, அனைத்து ரகங்களும் குவிண்டாலுக்கு ரூ.150 வரை விலை குறைந்தது. நிலக்கடலை முதல் ரகம் ரூ.3,820 முதல் 4,000 வரை, இரண்டாம் ரகம் ரூ.3,320 முதல் 3,530 வரையும் விலைக்கு போனது. மொத்தம் ரூ.3.20 லட்சத்துக்கு வர்த்தகம் நடந்தது.

## கோடை வெயிலால் கருகும் வெற்றிலை: விவசாயிகள் கவலை

**தர்மபுரி**: தர்மபுரி மாவட்டத்தில், கொளுத்தும் வெயிலில் வெற்றிலை சாகுபடி பாதிக்கப்பட்டு உள்ளதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். தர்மபுரி மாவட்டத்தில், தர்மபுரி, நல்லம்பள்ளி, சோலைக்கொட்டாய், அதகபாடி, பென்னாகரம் உட்பட மாவட்டம் முழுவதும் சுமார், 600 ஏக்கருக்கு மேல் வெற்றிலை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இங்கு சாகுபடி செய்யப்படும் வெற்றிலை, பெங்களூரு, சேலம், ஈரோடு, கோவை உள்ளிட்ட பகுதிகளுக்கு விற்பனைக்கு அனுப்பப்படுகிறது.

மாவட்டத்தில், கடந்த ஃபிப்ரவரி மாதம் முதல் வெயில் கொளுத்தி வருவதாலும், போதிய பாசன வசதி இல்லாததாலும், மாவட்டத்தில் வெற்றிலை உற்பத்தி பாதிக்கப்பட்டு உள்ளது. சில தினங்களாக, 100 டிகிரிக்கு மேல், வெயிலின் அளவு உள்ளதால், வெற்றிலைக் கொடிகளில் வெற்றிலைகள் கருகுவதுடன், கிழிந்தும் வருகிறது. இதனால், வெற்றிலை மகசூல் குறைந்ததால், சந்தைக்கு வரும் வெற்றிலையின் அளவு கணிசமாக குறைந்தது. வெற்றிலை, வரத்து குறைவால் ஒரு கூடை வெற்றிலை, ஆறு ஆயிரம் ரூபாய் முதல், 13 ஆயிரம் ரூபாய் வரை, தரத்துக்கு தகுந்தவாறு விற்பனை செய்யப்படுகிறது. வெற்றிலைக்கு, போதிய விலை கிடைத்தும், வெயில் காரணமாகவும், தண்ணீர் பற்றாக்குறையாலும், தர்மபுரி மாவட்டத்தில், வெற்றிலை சாகுபடி பாதிக்கப்பட்டு உள்ளதால், தற்போது, விவசாயிகளுக்கு கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளனர். இதுகுறித்து, வத்தல்மலை அடிவாரத்தை சேர்ந்த விவசாயி ஒருவர் கூறியதாவது:

தர்மபுரி மாவட்டத்தில் வத்தல்மலை அடிவாரம், எட்டிகானூர், வெள்ளோளை உட்பட மாவட்டம் முழுவதும் விவசாயிகள், அதிகளவில் வெற்றிலை சாகுபடியில்

ஈடுபட்டிருந்தனர். தொடர் பராமரிப்பு மற்றும் போதிய விலையில்லாதது, தண்ணீர் பற்றாக்குறை உள்ளிட்டவற்றால், சில ஆண்டுகளாக பெரும்பாலான விவசாயிகள் வெற்றிலை சாகுபடியில் இருந்து வெளியேறி, மாற்று பயிர்களை சாகுபடி செய்து வருகின்றனர்.

ஆனாலும், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், பாசன வசதி உள்ள விவசாயிகள், தொடர்ந்து, வெற்றிலை சாகுபடியில், ஈடுபட்டு வருகின்றனர். கடந்தாண்டு, போதிய பருவமழை இல்லாததாலும், கடந்த பிப்ரவரி மாதம் முதல் வெயில் கொளுத்தி வருவதாலும், விவசாய கிணறு, ஆழ்துளை கிணறுகளில், தண்ணீர் மட்டம் சரிந்தது. இதனால், வெற்றிலைக்கு, கடந்த ஒரு மாதமாக, சரிவர தண்ணீர் பாய்ச்ச முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மேலும், கொளுத்தி வரும் வெயிலின் காரணமாக வெற்றிலை கொடிகளில் இருந்து வெற்றிலை கிழிந்து வருவதுடன், கருகி வருகிறது. கடந்த, 20 தினங்களுக்கு மேல் சந்தையில், 100 கட்டுக்கள் கொண்ட ஒரு கூடை வெற்றிலை, ஆறாயிரம் ரூபாய் முதல், 13 ஆயிரம் வரை விற்பனை ஆகிறது. ஆனால், வெற்றிலை வரத்து குறைந்துள்ளதால், விவசாயிகளுக்கு போதிய வருமானம் கிடைக்கவில்லை, என்றார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**மஞ்சள் விலை திடீர் உயர்வு**



**ஈரோடு:** ஈரோடு அரசு ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நேற்று 938 மூட்டை மஞ்சள் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டு அதில் 934 மூட்டை விற்பனையானது. ஒரு குவிண்டால் விரலி மஞ்சள் அதிகபட்சமாக ஸீ7,269க்கும்,

குறைந்தபட்சமாக 6,614க்கும், கிழங்கு மஞ்சள் அதிகபட்சமாக 7,083க்கும், குறைந்தபட்சமாக 6,194க்கும் விற்றது. கடந்த வாரம் விரலி மஞ்சள் அதிகபட்சமாக 6,700க்கு விலை போன நிலையில் நேற்றைய மஞ்சள் மார்க்கெட்டில் குவிண்டாலுக்கு 500 வீதம் விலை அதிகரித்திருந்தது. 'இந்திய அளவில் மஞ்சள் விலை திடீரென உயர்ந்ததால் ஈரோடு மார்க்கெட்டிலும் விலை உயர்ந்துள்ளது' என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

**பூண்டு விலை சரிவு**



**சென்னை**: ராஜஸ்தான், மத்தியபிரதேசம் ஆகிய மாநிலங்களில் இருந்து பூண்டு அதிகளவில் தமிழகத்திற்கு விற்பனைக்கு கொண்டு வருவதால், அதன் விலை சரிந்துள்ளது என்று வியாபாரிகள் தெரிவித்தனர். 90க்கு விற்ற ஒரு கிலோ மலைப்பூண்டு தற்போது ஸி70க்கு விற்கப்படுகிறது. அதே போல நாட்டு பூண்டு 80க்கு விற்கப்பட்டது. அது இப்போது ரூ.50க்கு விற்பனையாகிறது என்றும் மொத்த வியாபாரிகள் தெரிவித்தனர். சில்லரை விற்பனையில் இந்த பூண்டுகளின் விலை இடத்திற்கு ஏற்ப ஸி15 வரை கூடுதலாக விற்கிறார்கள் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

**இயற்கை சீற்றங்களை முன்னதாக அறிய ஆய்வு மையம் அமைக்க வேண்டும் கம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகள் எதிர்பார்ப்பு**

**கம்பம்**, : கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் இயற்கை சீற்றங்களை முன் கூட்டியே அறிந்து கொள்ள வானிலை ஆய்வு மையம் அமைக்க வேண்டும் என விவசாயிகள்

கோரிக்கை விடுத்துள்ளனர். கம்பம் பள்ளத்தாக்கு பகுதிகளான கம்பம், கூடலூர், சுருளிப்பட்டி, காமயகவுண்டன்பட்டி, அணைப்பட்டி, ஆனைமலையன்பட்டி, ஓடைப்பட்டி, தென்பழனி உள்ளிட்ட பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் கருப்பு பன்னீர் திராட்சை மற்றும் விதையில்லா திராட்சை பயிரிடப்பட்டு வருகிறது. அவ்வப்போது ஏற்படும் பனி, கடுமையான வெயில் மற்றும் மழைக்காலங்களில் இந்த திராட்சை கொடிகளில் செவட்டை, பூ மற்றும் பிஞ்சுகள் உதிர்தல் உள்ளிட்ட பல வகையான நோய்கள் தாக்கி வருகிறது. இதை கட்டுப்படுத்த விவசாயிகள் ரசாயன உரங்களை பயன்படுத்தி வருகின்றனர். இருந்த போதிலும் இவ்வகை நோய்களை முழுவதும் கட்டுப்படுத்த முடியாமல் போகிறது.

இதனால் மகசூல் பெருமளவு பாதிக்கப்பட்டு விவசாயிகள் நஷ்டத்தை சந்தித்து வருகின்றனர்.

மேலும் பல விவசாயிகள் இந்த நோய் தாக்குதல் காரணமாக திராட்சை விவசாயத்தை கைவிட்டு மாற்று விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர். மகாராஷ்டிரா மாநிலம் புனேயில் வானிலை ஆய்வு மையம் அமைக்கப்பட்டு திராட்சை விசாயிகளுக்கு அவ்வப்போது ஏற்படும் பருவ நிலை மாற்றங்கள் குறித்து தகவல் தெரிவிக்கப்பட்டு வருகிறது.

அதேபோல் கம்பம் பள்ளத்தாக்கு பகுதியிலும் இந்த ஆய்வு மையம் அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து திராட்சை விவசாயிகள் கூறுகையில், ‘மகாராஷ்டிரா மாநிலம் புனேவில் வானிலை ஆய்வு மையத்திலிருந்து ஒவ்வொரு விவசாயிகளின் செல்போன் நம்பர்கள் பெறப்பட்டு கடுமையான பனி, மழை உள்ளிட்ட இயற்கை சீற்றங்களை முன்கூட்டியே கண்டறிந்து அதற்கு என்ன மருந்துகள் தெளிக்க வேண்டும் என எஸ்எம்எஸ் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

விவசாயிகளும் அதே போல் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதனால் மகசூல் நல்ல முறையில் கிடைக்கிறது. அதே போல் கம்பம் பகுதியிலும் ஆய்வு மையம் அமைக்கப்பட்டால் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வசதியாக இருக்கும்’ என்றனர்.

**கோடை மழை கனமழையாக மாறினால் மானாவாரி? விவசாயம்? அதிகரிக்க? வாய்ப்பு தேவாரம் விவசாயிகள் எதிர்பார்ப்பு**

**தேவாரம்**, : தேவாரம் பகுதியில் சாரலுடன் பெய்து வரும் கோடை மழை கனமழையாக மாறி னால் மானாவாரி விவ சாயம் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக விவசாயிகள் எதிர்பார்ப்புடன் உள்ளனர்.

தேவாரம், கோம்பை, பண்ணைப்புரம் உள்ளிட்ட பகுதிகள் மேற்கு தொடர்ச்சி மலையடிவாரத்தின் மிக அருகிலேயே உள்ளன. இதனால் மழை பெய்தாலும் இங்கு அதிகமாக கிடைக்காத நிலை உள்ளது. இதனால் ஆண்டுதோறும் கனமழையை பெய்தால் மட்டுமே மானாவாரி பயிர்களாக உள்ள சோளம், கம்பு, கேழ்வரகு, கப்பை, எள், தக்காளி உள்ளிட்ட பயிர்கள் விளையக்கூடிய நிலை உண்டாகும். கடந்த வருடம் முதலே வழக்கமாக பெய்யக்கூடிய பருவமழையும் பொய்த்து விட்டது. இதனால் விவசாயிகள் விரக்தியின் உச்சத்தில் உள்ளனர். இந்த வருடம் வழக்கத்திற்கு மாறாக கோடை வெப்பம் கொளுத்தி எடுக்கிறது. மலையோரங்களில் உள்ள நிலங்களுக்கே செல்ல முடியாதநிலை உண்டாகி உள்ளது. வெப்பத்தின் தாக்கம் காரணமாக எந்த பயிர்களையும் விதைக்கவில்லை. ஆனால் கோடைமழை பெய்தால் விவசாயிகள் தங்களது நிலங்களில் மானாவாரி பயிர்களை பயிர் செய்வதை வழக்கமாக கொண்டுள்ளனர். இந்த வருடம் மழை கிடைப்பதற்கான அறிகுறிகள் இருந்தும் பெய்யாமல் ஏமாற்றுவதுதான் அதிகமாக உள்ளது. குறிப்பாக கடந்த 3 தினங்களாகவே அதிகமாக மழை பெய்யும் அளவிற்கு இடி, மின்னல்களின் ஓசைதான் கேட்கிறது. மழை பெய்யாமல் ஏமாற்றிவருகிறது. இது விவசாயிகளை அதிர்ச்சி அடைய வைத்துள்ளது.

ஏதாவது ஒரு இடத்தில் பெய்யக்கூடிய மழை யினால் வெறும் சாரல் மட்டும்தான் காடுகளில் விழுகிறது. இதனால் எந்தவிதமான பிரயோஜனமும் இல்லாத நிலையில் விவசாயிகள் விரக்தியின் உச்சத்தில் உள்ளனர். மழை பெய்தால் வளம் கிடைக்கும் என்றும், காட்டுவிவசாய பயிர்களை விதைப்பதற்கு வசதியாக இருக்கும் என்பதால் இயற்கையை எதிர்பார்த்து விவசாயிகள் காத்திருக்கின்றனர். இதுகுறித்து விவசாயி சுந்தரேசன் கூறுகையில், 'கோடை காலத்தில் அதிகமான மழை கிடைப்பது என்பது வழக்கமான ஒன்றாகும். இதனால் காட்டு வெள்ளாமை சிறப்பாக இருக்கும். ஆனால் இந்த வருடமோ மழை என்பதே இல்லை. ஏதாவது ஒரு இடத்தில் பெய்யக்கூடிய மழை இங்கு சாரலாக கிடைக்கிறது. இதனால்

எந்தவிதமான நன்மையும் இல்லை. கனமழையாக பெய்தால் மட்டுமே விவசாயம் செய்து சோளம், கம்பு உள்ளிட்ட பயிர்கள் விளைவதற்கு வாய்ப்புகள் உண்டாகும். எனவே மழையை எதிர்பார்த்து காத்திருக்கிறோம்' என்றார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**இந்த ஆண்டில் சராசரி அளவிற்கு கீழ் மழை குறையலாம்**



**புதுடெல்லி,**

இந்த ஆண்டில் தென்மேற்கு பருவமழை சராசரி அளவிற்கு கீழ் குறைவதற்கு 40 சதவீத வாய்ப்பு உள்ளது என தனியார் வானிலை ஆய்வு மையமான ஸ்கைமெட் தெரிவித்துள்ளது. இந்நிறுவனத்தின் முன்னறிவிப்பு சர்வதேச அமைப்புகளின் கணிப்புகளுக்கு இணையாக உள்ளது.

3–7 ஆண்டுகளுக்கு ஒரு முறை எல் நினோ என்ற பருவநிலை மாற்றம் ஏற்படுகிறது. இதனால் பருவமழையில் மிகப் பெரிய மாற்றங்கள் ஏற்படுகின்றன. மேலும் பசிபிக் பெருங்கடல் சார்ந்த சில பகுதிகளில் வெப்பநிலை அதிகரிக்கிறது. பொதுவாக இந்த எல் நினோ நிலவரங்களால் இந்தியாவில் பருவமழை குறையும். கடந்த 2002, 2004 மற்றும் 2009–ல் இத்தகைய விளைவு ஏற்பட்டது. இதனால் அந்த ஆண்டுகளில் கடும் வறட்சி ஏற்பட்டது. நம் நாட்டில் விவசாயத்திற்கு

உயிர்நாடியாக இருப்பது பருவமழைதான். பருவமழை குறைந்தால் முக்கிய விவசாய மண்டலங்களாக திகழும் வடக்கு மற்றும் மேற்கு பகுதிகள் பாதிப்புக்குள்ளாகும்.

எதிர்வரும் ஆகஸ்டு மாதத்தில் வழக்கமான பருவமழைக்கு 70 சதவீத வாய்ப்பு உள்ளது. ஜூன் மாதத்தில் இயல்பான பருவமழை பெய்ய 60 சதவீத வாய்ப்பு உள்ளது. அந்த மாதத்தில் மழை பற்றாக்குறைக்கு 25 சதவீதம் வாய்ப்புள்ளது என ஸ்கைமெட் ஆய்வின் முடிவுகள் கூறுகின்றன.

**கோடை சீசனை முன்னிட்டு சிம்ஸ் பூங்கா அழகுப்படுத்தும் பணி மும்முரம்**



**குன்னூர்,**

கோடை சீசனை முன் னிட்டு குன்னூர் சிம்ஸ் பூங்காவை அழகுப்படுத் தும் பணி மும்முரமாக நடைபெற்று வருகிறது. இதையொட்டி சுற்றுலா பயணிகள் வருகை அதிகரித்துள்ளது.

**<u>கோடை சீசன்</u>**

நீலகிரி மாவட்டத்தில் கோடை சீசனை அனுபவிக்க பல்வேறு இடங்களில் இருந்து சுற்றுலா பயணிகள் வருகிறார் கள். சுற்றுலா பயணிகளை மகிழ்விக்க ஊட்டியில் பல் வேறு விழாக்கள் நடத்தப்படு கின்றன. கோடை சீசனை முன் னிட்டு வருகிற மே மாதம் 3–ந் தேதி கோத்தகிரி நேரு பூங்காவில் காய்கறி கண்காட் சியும், 10, 11

ஆகிய தேதிகளில் ஊட்டி ரோஜா பூங்காவில் ரோஜா கண்காட்சியும் நடைபெறுகிறது.

குன்னூர் சிம்ஸ் பூங்காவில் 56–வது பழக்கண்காட்சி அடுத்த மாதம் 17, 18–ந் தேதி களில் நடைபெறுகிறது. பழக் கண் காட்சியை முன்னிட்டு குன்னூர் சிம்ஸ் பூங்காவை அழகுபடுத்தும் பணியில் பூங்கா ஊழியர்கள் ஈடுபட்டு உள்ளனர்.

**<u>பூத்து குலுங்கும் மலர்கள்</u>**

இந்த நிலையில் ஊட்டியில் உள்ள ரோஜா பூங்காவை போன்று குன்னூர் சிம்ஸ் பூங்காவிலும் ரோஜா மலர்கள் அதிகமாக இடம்பெற வேண் டும் என்பதற்காக இந்த ஆண்டு ரோஜா மலர் செடிகள் அதிகளவு நடவு செய்யப்பட் டன. ஆனால் போதுமான மழை இல்லாததால் பூக்கள் மலர்வதில் தாமதம் ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டது.

இதையடுத்து, பூங்கா ஊழி யர்கள் தனிக்கவனம் செலுத்தி ரோஜா செடிகளை பராமரித்த தால் தற்போது பூங்காவில் உள்ள மலர்ச்செடிகளில் மலர்கள் நன்கு பூத்து உள் ளன. பூங்காவில் மலர்ந்து உள்ள மலர்களை கண்டு களிக்கும் சுற்றுலா பயணிகள் மலர்ச் செடியின் அருகில் நின்று புகைப்படம் எடுப்பதில் ஆர் வம் காட்டி வருகின்றனர். சிம்ஸ் பூங்காவில் பழக்கண் காட்சி அடுத்த மாதம் தொடங்க உள்ள நிலையில் மலர்கள் மலர்ந்து இருப்பது சுற்றுலா பயணிகளை கவருவ தாக உள்ளது.